# இலங்கைத் துறைமுக அதிகாரசபை

## அறிவித்தல்

எனது இல: எச்ஆர்டி/ ஈஎக்ஸ்/ 04/14(1)

கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு வேண்டப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள தமது பதவியில் நிரந்தரம் செய்யப்பட்டுள்ள இந்த அதிகாரசபையின் ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. பதவி: இழுவைக்கல அதிபர் - MLM 2

1 சம்பள வகையீடு:- **MLM 2**

ஆரம்பச் சம்பளம் : ரூ. 82,505/=

சம்பள ஏற்றம் : ரூ. 1,585/=

11 **கல்வி மற்றும் தொழிற் தகைமைகள்:**

மொத்த நிறை 500 இற்குக் குறைந்த கரையோர கடற் பயணங்களில் (NCV) ஈடுபடும் கப்பல்களில் இழுவைக்கல அதிபரொருவராக சேவையிலீடுபடுவதற்காக பணிப்பாளரினால் (வணிக கப்பல்) வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

**அல்லது**

பணிப்பாளரினால் (வணிக கப்பல்) வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான சான்றிதழ் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

**அனுபவம்**

உப இழுவைக்கல அதிபர் JLM பதவியில் ஐந்து(05) வருட முனைப்பான அனுபவம்.

**அல்லது**

உப இழுவைக்கல அதிபர் JLM பதவியில் மூன்று(03) வருட முனைப்பான அனுபவத்துடன் கப்பலோட்ட பொறுப்பு அதிகாரியொருவராக இரண்டு (02) வருட கடற் பயண அனுபவம்.

111. **தெரிவு செய்யும் விஷேட காரணிகள்**

செயலாற்றுகை மதிப்பீடு திருப்திகரமான மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

### 02. பதவி: துறைமுக காப்பு அலுவலர் - JLM

1 சம்பள வகையீடு:- **JLM**

ஆரம்பச் சம்பளம் : ரூ. 75,065/=

சம்பள ஏற்றம் : ரூ. 1,440/=

11 **கல்வி மற்றும் தொழிற் தகைமைகள்:**

தீயணைக்கும் பொறியியல் நிறுவனத்தில் (ஐக்கிய இராச்சியம்) பட்டம் தொடர்பான பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது தகுதி, உயிர்காப்பு மற்றும் சுகாதாரத் துறையில் அதற்குச் சமனான தகைமை.

**மற்றும்**

மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலையினால் வழங்கப்பட்ட சுகாதாரம் மற்றும் உயிர்காப்பு தொடர்பான சான்றிதழ்.

**அத்துடன்**

**அனுபவம்**

**SG** சம்பள வகையீட்டின் உரிய துறையில் ஐந்து(05) வருட முனைப்பான அனுபவத்தினை பூர்த்தி செய்திருத்தல்.

111. **தெரிவு செய்யும் விஷேட காரணிகள்**

கடந்த மூன்று(03) வருடங்களினுள் செயலாற்றுகை மதிப்பீடு திருப்திகரமான மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

### 03. பதவி: சிரேட்ட கடற் கல இணைப்பு அலுவலர் - JLM

**(Senior Sea Traffic Cordinator)**

1. சம்பள வகையீடு : **JLM**

ஆரம்பச் சம்பளம் : ரூ. 75,065/=

வருடாந்த சம்பள ஏற்றம் :- ரூ. 1,440/=

11. **கல்வி மற்றும் தொழிற் தகைமைகள்:**

கரையோர கடற் பயணங்களில் (NCV) ஈடுபடும் GT 3000 இற்குக் குறையாத கப்பல்களில் கல அதிபரொருவராக சேவையில் ஈடுபடும் பொருட்டு இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசுகளினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறு உயர் மட்டத்திலான தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசுகளினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான சான்றிதழ் பெற்றிருத்தல்.

மற்றும்

இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ரேடார் கண்காணிப்புச் சான்றிதழ் (Radar Observers Certificate) அல்லது சமனான சான்றிதழ் பெற்றிருத்தல்.

மற்றும்

உலகளாவிய கடல் சார் இடர்கள் மற்றும் பாதுகாப்பு முறைமை (Global Maritime Disaster Safety System) (GMDSS) சான்றிதழ்.

**அத்துடன்**

**அனுபவம்**

SG சம்பள வகையீட்டில் கடற் கல இணைப்பு அலுவலர் பதவியில் ஐந்து (05) வருட முனைப்பான அனுபவம் பெற்றிருத்தல்.

111. **தெரிவு செய்யும் விஷேட காரணிகள்**

கடந்த மூன்று (03) வருடங்களினுள் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

குறிப்பு :

சிறந்த உடல் மற்றும் உள தகுதியுடையவராகவும் மற்றும் சிறந்த கட்புல மற்றும் செவிப்புலனையுடையவராகவும் இருத்தல் வேண்டும். ( மருத்துவப் பரிசோதனையொன்றிற்கு தோற்றுதல் வேண்டும்)

இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் ஏற்கனவே விதிக்கப்பட்ட அல்லது எதிர் காலத்தில் விதிக்கப்படக் கூடிய சகல சட்ட திட்டங்களுக்குமிணங்க நியமனம் பெறுபவர்கள் செயற்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்ப நாட்டின் எந்தவொரு பகுதியிலும் அல்லது அதிகாரசபையின் எந்தவொரு பகுதி/பிரிவில் சேவை புரிய உட்படுவர்.

மாதிரிப் படிவங்களிற்கமைய ஒழுங்கு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024. ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் பிரதான முகாமையாளருக்கு (மனிதவளம் மற்றும் நிருவாகம்) கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட பகுதி/பிரிவுத் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் கல்வி மற்றும் தொழிற் சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும். சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப் பெற்றிராத விண்ணப்பங்கள் மற்றும் இவ்வறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு சகல வகையிலும் இணங்கப் பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

குறிக்கப்பட்டுள்ள திகதிக்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் சம்பந்தப்பட்ட பகுதி/பிரிவுத் தலைவர்கள் அல்லது வதிவிட முகாமையாளர்களினால் அவை தாமதமானதற்கான காரணங்கள் குறிப்பிடப்படுதல் வேண்டும். அவ்வாறு காரணங்கள் தெரிவிக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**ஒப்பமிட்டது / டி. ஆர். டப்ளியூ. எலபாத**
**பிரதான முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிருவாகம்)**
2024. 07. ஆந் திகதி
**மனிதவளப் பகுதி.**